இனிமையான குழந்தைகளே! சிவபாபாவின் மீது மதிப்பு, மரியாதை உள்ளது என்றால், அவரது ஸ்ரீமத்படி நடந்து கொண்டே இருங்கள். ஸ்ரீமத்படி நடப்பது என்றால் தந்தைக்கு மரியாதை அளிப்பது என்பதாகும்.

கேள்வி: குழந்தைகள் தந்தையை விடவும் பெரிய மந்திரவாதி ஆவார்கள் - அது எப்படி?

பதில்: உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையை தன்னுடைய குழந்தையாக ஆக்கிவிடுவது. உடல், மனம் மற்றும் பொருளால் தந்தையை தனது வாரிசாக்கி, சமர்ப்பணம் ஆவது - இது குழந்தைகளின் மந்திர சக்தி ஆகும். யார் இப்பொழுது பகவானை வாரிசாக ஆக்குகிறார்களோ அவர்கள் 21 பிறவிகளுக்கு ஆஸ்திக்கு அதிகாரி ஆகிவிடுகிறார்கள்.

கேள்வி: (ட்ரிப்யூனல்) விசாரணைக் குழு எந்த குழந்தைகளுக்காக அமருகிறது?

பதில்: யார் தானம் செய்த பொருளை திரும்பப் பெறுவதற்கான எண்ணம் வைக்கிறார்களோ, மாயை யின் வசப்பட்டு (டிஸ்-சர்வீஸ்) நேர் மாறான சேவை செய்கிறார்களோ அவர்களுக்காக விசாரணைக் குழு அமரும்.

ஓம் சாந்தி. ஆன்மீக விசித்திரமான (சரீரமற்ற) தந்தை வந்து விசித்திரமான (ஆத்மா ரூபமான) குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். அதாவது தூர தேசத்தில் வசிப்பவர். அவர் பரமபிதா பரமாத்மா என்று கூறப்படுகிறார் - தொலை தூர தேசத்திலிருந்து வந்து இந்த சரீரத்தின் மூலமாக உங்களுக்குக் கற்பிக்கிறார். இப்பொழுது யார் கற்கிறார்களோ அவர்கள் கற்பிக்கக் கூடியவருடன் யோகம் (தொடர்பு) இயல்பாகவே கொள்கிறார்கள். ஹே குழந்தைகளே, ஆசிரியருடன் யோகம் கொள்ளுங்கள் அல்லது அவரை நினைவு செய்யுங்கள் என்று கூற வேண்டியதில்லை. "ஹே ஆன்மீகக் குழந்தை களே! இவர் உங்களது தந்தையும் ஆவார், ஆசிரியரும் ஆவார் மற்றும் குருவும் ஆவார். இவருடன் யோகம் கொள்ளுங்கள் அதாவது தந்தையை நினைவு செய்யுங்கள்" என்று இங்கு (பிரம்மா) தந்தை கூறுகிறார். இவர் (சிவபாபா) (விசித்திரமான) உடல் இல்லாத பாபா ஆவார். நீங்கள் அடிக்கடி இவரை மறந்துவிடுகிறீர்கள். எனவே நினைவு கூற வேண்டி வருகிறது. கற்பிப்பவரை நினைவு செய்வதால் உங்களுடைய பாவங்கள் சாம்பலாகிவிடும். "என்னையேப் பாருங்கள் இதில் நிறைய நன்மை உண்டு" என்று ஆசிரியர் கூறுவது என்பது நியதி கிடையாது. தந்தை என்னை நினைவு செய்யுங்கள் என்று மட்டும் கூறுகிறார். இந்த நினைவின் பலத்தால் தான் உங்கள் பாவங்கள் அழிய வேண்டி உள்ளது. இதற்கு நினைவு யாத்திரை என்று கூறப்படுகிறது. இப்பொழுது ஆன்மீக விசித்திரமான (சரீரமற்ற) தந்தை குழந்தைகளைப் பார்க்கிறார். குழந்தைகள் கூட தங்களை ஆத்மா என்று உணர்ந்து விசித்திரமான (சரீரமற்ற) தந்தையைத் தான் நினைவு செய்கிறார்கள். நீங்கள் பலமுறை சரீரத்தில் வருகிறீர்கள். நானோ முழு கல்பத்தில் சரீரத்தில் வருவது இல்லை. இந்த சங்கம யுகத்தில் மட்டுமே குழந்தைகளாகிய உங்களுக்கு கற்பிக்க மிகவும் தூர தேசத்திலிருந்து வருகிறேன். இதை நல்ல முறையில் நினைவு செய்ய வேண்டும். பாபா நமது தந்தை ஆசிரியர் மற்றும் சத்குரு ஆவார். விசித்திரமானவர் (சரீரம் அற்றவர்) ஆவார். அவருக்கு தனக் கென்று உடல் கிடையாது. பிறகு எப்படி வருகிறார்? நான் இயற்கையின், அதாவது ஒரு (மனிதரின்) வாயின் ஆதாரத்தை எடுக்க

வேண்டி வருகிறது என்று கூறுகிறார். நானோ விசித்திரமானவன் (சித்திரம் (உடல்) இல்லாதவன்) ஆவேன். நீங்கள் அனைவரும் சித்திரம் (உடல்) உடையவர்கள் ஆவீர்கள். எனக்கு ரதம் என்பது அவசியம் வேண்டும் அல்லவா? குதிரை வண்டியில் வரமாட்டார் அல்லவா? நான் இந்த உடலில் பிரவேசம் செய்கிறேன் என்று தந்தை கூறுகிறார். யார் முதல் நம்பரில் இருக்கிறாரோ அவரே பிறகு கடைசி நம்பர் ஆகிறார். யார் சதோபிரதானமாக இருந்தார்களோ அவர்களே தமோ பிரதானமானவர்கள் ஆகிறார்கள். எனவே அவர்களைத் தான் மீண்டும் சதோ பிரதானமானவர்களாக ஆக்குவதற்காக தந்தை கற்பிக்கிறார். இந்த இராவண இராஜ்யத்தில் 5 விகாரங்களின் மீது வெற்றி அடைந்து குழந்தைகளாகிய நீங்கள் உலகத்தை வென்றவர்களாக ஆக வேண்டும் என்று புரிய வைக்கிறார். நமக்கு விசித்திரமான (சரீரமில்லாத) தந்தை கற்பிக்கிறார் என்பதை குழந்தைகள் நினைவில் கொள்ள வேண்டும். தந்தையை நினைவு செய்யவில்லை என்றால் பாவங்கள் எப்படி சாம்பலாகும்? இந்த விஷயங்களைக் கூட இப்பொழுது, சங்கம யுகத்தில் மட்டுமே நீங்கள் கேட்கிறீர்கள். ஒருமுறை என்னவெல்லாம் நடக்கிறதோ மீண்டும் கல்பத்திற்குப் பிறகு அதுவே திரும்ப நடைபெறும். இவை எவ்வளவு நல்ல விளக்கங்கள் ஆகும். இதற்கு மிக விசால புத்தி வேண்டும். இது ஒன்றும் சாது சந்நியாசி ஆகியவர்களின் சத்சங்கம் அல்ல. அவரை தந்தை என்று கூறுகிறீர்கள். பிறகு குழந்தை என்றும் கூறுகிறீர்கள். இவர் நமக்கு தந்தையும் ஆவார், குழந்தையும் ஆவார் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். நாம் அனைத்தையும் இந்த குழந்தைக்கு ஆஸ்தியாக அளித்து விட்டு பின் தந்தையிடமிருந்து 21 பிறவிகளுக்கான ஆஸ்தியைப் பெறுகிறோம். குப்பைகள் எல்லாவற்றையும் கொடுத்து விட்டு தந்தையிடமிருந்து நாம் உலக அரசாட்சியைப் பெறுகிறோம். நீங்கள் வந்தீர்கள் என்றால், நாங்கள் உங்கள் மீது உடல் மனம் பொருளுடன் சமர்ப்பணம் ஆகிவிடுவோம் என்று பாபாவிடம் நாங்கள் பக்தி மார்க்கத்தில் கூறி இருந்தோம் என்று கூறுகிறார்கள். லௌகீக தந்தை கூட குழந்தைகள் மீது (அர்ப்பணம்) சமர்ப்பணம் ஆகிறார் அல்லவா? எனவே இங்கு உங்களுக்கு எப்பேர்ப்பட்ட விசித்திர சரீரமில்லா (அதிசயமான) தந்தை கிடைத்துள்ளார்! அவரை நினைவு செய்தீர்கள் என்றால், உங்களுடைய பாவங்கள் சாம்பலாகி விடும் மற்றும் உங்கள் வீட்டிற்குச் சென்று விடுவீர்கள். எவ்வளவு நீண்ட பயணம் இது. தந்தை எங்கு வருகிறார் என்று பாருங்கள். பழைய இராவண இராஜ்யத்தில் வருகிறார்! எனது அதிர்ஷ்டத்தில் (பாவன) தூய சரீரம் கிடைப்பதாக இல்லை என்று தந்தை கூறுகிறார். பதீதர்களை பாவனமாக ஆக்க எப்படி வருவேன்? நான் பதீத உலகத்தில் தான் வந்து அனைவரையும் பாவனமாக ஆக்க வேண்டி உள்ளது. எனவே அப்பேர்ப்பட்ட ஆசிரியருக்கு மதிப்பு அளிக்க வேண்டும் அல்லவா? அனேகருக்கு அந்த மதிப்பு/மரியாதை பற்றி தெரிவதே இல்லை. இதுவும் நாடகத்தில் நடக்க வேண்டி உள்ளது. இராஜ்யத்திலோ வரிசைக் கிரமமாக எல்லோரும் வேண்டும் அல்லவா? எனவே எல்லா விதமானவர்களும் இங்கேயே தான் உருவாகிறார்கள். குறைந்த பதவி அடைபவர்களுடைய நிலை இப்படி ஆகும். அவர்கள் படிக்கவும் மாட்டார்கள், தந்தையின் நினைவிலும் இருக்க மாட்டார்கள். இவர் (சிவபாபா) மிகவுமே அதிசயமான தந்தை ஆவார் அல்லவா? இவருடைய நடத்தை கூட அலௌகீகமானதாகும் இவருடைய பாகம் (பார்ட்) வேறு யாருக்கும் கிடைக்க முடியாது. இந்த தந்தை வந்து உங்களுக்கு எவ்வளவு உயர்ந்த கல்வியைக் கற்பிக்கிறார். எனவே அதற்கு மதிப்பும் கொடுக்க வேண்டும். அவருடைய

ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். ஆனால் மாயை அடிக்கடி மறக்க வைத்து விடுகிறது. மாயை எவ்வளவு வலிமை உடையது என்றால் மிக நல்ல குழந்தைகளையும் கூட வீழ்த்தி விடுகிறது. தந்தை எவ்வளவு செல்வந்தராக ஆக்குகிறார், ஆனால் மாயை ஒரேயடியாக தலையைத் (கவனத்தை) திருப்பி விடுகிறது. மாயையிடமிருந்து தப்பித்திருக்க வேண்டும் என்றால் தந்தையை அவசியம் நினைவு செய்ய வேண்டி உள்ளது. மிக நல்ல குழந்தைகள் கூட தந்தையினுடையவராக ஆகி, பின்னர் மாயையினுடையவராகி விடுகிறார்கள், கேட்கவே வேண்டாம்! முழுமையான துரோகி ஆகி விடுகிறார்கள். மாயை ஒரேயடியாக மூக்கை பிடித்து விடுகிறது. யானையை முதலை விழுங்கியது என்ற கதைகளும் உள்ளன அல்லவா? ஆனால் அதன் பொருளை யாருமே புரிந்து கொள்வதில்லை. தந்தை ஒவ்வொரு விஷயத்தையும் நல்ல முறையில் புரிய வைக்கிறார். ஒரு சில குழந்தைகள் புரிந்து கொள்ளவும் செய்கிறார்கள். ஆனால் வரிசைக்கிரமமாக முயற்சிக்கேற்ப இருக்கிறார்கள். ஒரு சிலருக்கோ சிறிதளவும் தாரணை ஆகுவதில்லை. மிகவும் உயர்ந்த கல்வி இதுவாகும் அல்லவா? எனவே அதை தாரணை செய்ய முடியாம-ருக்கிறார்கள். இவர்களுடைய அதிர்ஷ்டத்தில் இராஜ்ய பாக்கியம் இல்லை என்று தந்தை கூறுவார். ஒரு சிலர் அரளிப்பூவாக இருக்கிறார்கள். ஒரு சிலர் நறுமணமுள்ள மலராக உள்ளார்கள். பலவிதமான (வெரைட்டி) பூந்தோட்டம் அல்லவா? இவ்வாறு கூட இருக்க வேண்டும் அல்லவா? இராஜ்யத்தில் உங்களுக்கு வேலைக்காரர்கள், ஊழியர்கள் கூட கிடைப்பார்கள்? இல்லையென்றால் வேலைக்காரர்கள், ஊழியர்கள் எப்படி கிடைப் பார்கள்? இராஜ்யம் இங்கு தான் உருவாகிறது. வேலைக்காரர்கள், ஊழியர்கள், சண்டாளர்கள் ஆகியோர் எல்லோரும் உருவாகிறார்கள். இந்த இராஜதானி ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. இது அதிசயம் தான்! தந்தை உங்களை இவ்வளவு உயர்ந்தவராக ஆக்குகிறார்! எனவே அப்பேர்ப் பட்ட தந்தையை நினைவு செய்து செய்து அன்புக் கண்ணீர் வழிய வேண்டும்!

நீங்கள் மாலையின் மணிகளாக ஆகிறீர்கள் அல்லவா? கூறுகிறார்கள், பாபா நீங்கள் எவ்வளவு விசித்திரமாக உள்ளீர்கள், எப்படி வந்து பதீதர்களாகிய (தூய்மையற்றவர்கள்) எங்களை நீங்கள் பாவனமாக (தூய்மையாக) ஆக்குவதற்காக கற்பிக்கிறீர்கள். பக்தி மார்க்கத்தில் சிவனுக்கு பூஜை செய்கிறார்கள் என்றால் கூட இவர் பதீத பாவனர் ஆவார் என்பதைப் புரிந்து கொள்கிறார்களா என்ன? பிறகும் "ஹே பதீதபாவனரே வாருங்கள் வந்து எங்களை மலர் போல தேவி தேவர்களாக ஆக்குங்கள்" என்று அழைத்துக் கொண்டே இருக்கிறார்கள். குழந்தைகளின் அழைப்பை தந்தை ஏற்றுக் கொள்கிறார் மற்றும் அவர் வரும்பொழுது "குழந்தைகளே தூய்மை ஆகுங்கள்" என்று கூறுகிறார். இதன் காரணமாகத் தான் குழப்பங்கள் ஏற்படுகின்றன. தந்தை அதிசயமானவர் (வண்டர்ஃபுல்) ஆவார் அல்லவா? என்னை நினைவு செய்தீர்கள் என்றால் பாவங்கள் நீங்கும் என்று குழந்தைகளுக்குக் கூறுகிறார். நான் ஆத்மாக் களிடம் உரையாடுகிறேன் என்பதை தந்தை அறிந்துள்ளார். எல்லாவற்றையும் ஆத்மா தான் செய்கிறது. விகர்மங்களையும் ஆத்மா தான் செய்கிறது. ஆத்மா தான் சரீரம் மூலமாக அனுபவிக்கிறது. உங்களுக்காகவே விசாரணை குழு அமரும். குறிப்பாக யார் (சர்விஸ்) சேவைக்கு தகுதி உடையவராக ஆகி பிறகு துரோகி ஆகி விடு கிறார்களோ அவர்களுக்காக விசாரணைக் குழு அமரும். எப்படி மாயை விழுங்கி விடுகிறது என்பதையும் தந்தை தான் அறிந்துள்ளார்.

"பாபா நாங்கள் தோற்றுப் போய் விட்டோம். முகத்தை கருப்பாக்கிவிட்டோம்.. இப்பொழுது எங்களை மன்னித்து விடுங்கள்". இப்பொழுது விழுந்துவிட்டார் மற்றும் மாயையினுடையவர் ஆகிவிட்டார். பிறகு மன்னிப்பு கேட்பது எதற்காக? அப்படிப்பட்டவர் அதிகம் முயற்சி செய்ய வேண்டி வரும். நிறைய பேர் மாயையிடம் தோற்று விடுகிறார்கள். இங்கு தந்தையிடம் தானம் கொடுத்து விட்டுச் செல்லுங்கள். பிறகு திரும்ப வாங்காதீர்கள் என்று தந்தை கூறுகிறார். இல்லையென்றால் முடிந்து போய் விடும். ஹரிச்சந்திரனின் உதாரணம் உள்ளது அல்லவா? தானம் கொடுத்து பிறகு மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மீண்டும் எடுத்து கொண்டுவிட்டார்கள் என்றால், நூறு மடங்கு தண்டனை ஏற்பட்டுவிடும். பிறகு மிகவும் தாழ்ந்த பதவியை அடைந்துவிடுவீர்கள். இந்த இராஜாங்கம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது என்பதை குழந்தைகள் அறிந்துள்ளார்கள். பிற மதங்கள் ஸ்தாபனை செய்பவர்களுடையது, முதலில் இருந்து இராஜ்யம் உருவாவதில்லை. 50-60 கோடி எண்ணிக்கையில் ஆகிவிடும்பொழுது தான் இராஜ்யம் உருவாகும். அப்பொழுது தான் கூட்டம் தயாராகும். ஆரம்பத்தில் ஒருவர் இருவர் தான் வருகிறார் கள். பிறகு எண்ணிக்கை அதிகமாகிறது. கிறிஸ்து கூட ஏதோ ஒரு வேடத்தில் வருவார் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். ஏழை ரூபத்தில் முதல் நம்பரில் இருப்பவர், பின் அவசியம் கடைசி நம்பரில் இருப்பார். கிறித்துவர்கள் கிறிஸ்து உண்மையில் இச்சமயம் ஏழை ரூபத்தில் உள்ளார் என்று உடனே கூறுவார்கள். புனர் ஜென்மம் - மறுபிறவி எடுக்கவே வேண்டும் என்பதைப் புரிந்துள்ளார்கள். தமோபிரதானமோ ஒவ்வொருவரும் நிச்சயம் ஆக வேண்டும். இச்சமயம் முழு உலகமே தமோபிர தானமான நிலையில் உள்ளது. இந்த பழைய உலகத்தின் விநாசம் கூட அவசியம் ஆக வேண்டி உள்ளது. கிறிஸ்தவர்கள் கூட "கிறிஸ்து வருவதற்கு 3 ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் சொர்க்கம் இருந்தது பின்னர் அவசியம் மீண்டும் இப்பொழுது உருவாகும்" என்று கூறுவார்கள். ஆனால் இந்த விஷயங்களை யார் புரிய வைப்பது? இப்பொழுது குழந்தைகளினுடைய நிலை எங்கே உள்ளது என்று தந்தை கூறுகிறார். எங்களால் யோகத்தில் இருக்க முடிவதில்லை என்று அடிக்கடி எழுதுகிறார்கள். குழந்தைகளின் செயல்பாடுகள் மூலமாகப் புரிந்து கொண்டு விடுகிறார். பாபாவிடம் சமாச்சாரம் (செய்தி) கொடுப்பதற்குக் கூட பயப்படுகிறார்கள். தந்தையோ குழந்தைகள் மீது எவ்வளவு அன்பு செலுத்துகிறார். அன்புடன் நமஸ்தே கூறுகிறார். குழந்தைகளிடமோ அகங்காரம் இருக்கிறது. மிக நல்ல குழந்தைகளை கூட மாயை மறக்க வைத்துவிடுகிறது. பாபாவால் புரிந்து கொள்ள முடியும். நான் (நாலேஜ் ஃபுல்) ஞானம் நிறைந்தவன் ஆவேன் என்று கூறுகிறார். அனைத்தும் அறிந்தவர் (ஜானி-ஜானன்ஹார்) என்பதன் பொருள் நான் அனைவருக்கும் உள்ளே இருப்பதை அறிந்துள்ளேன் என்று பொருளல்ல. நான் வந்திருப்பதே கற்பிப்பதற்கேயன்றி, ஒருவருள்ளே இருப்பதை அறிந்து கொள்வதற்காக அல்ல. நான் யாரைப் பற்றியும் அறிந்து கொள்ளும் காரியம் செய்வதில்லை. இந்த சாகாரமானவரும் (பிரம்மா) கூட அதனைப்போல ஒருவரை அறிந்து கொள்ளும் காரியத்தை செய்வதில்லை. இவரோ (பிரம்மா) எல்லாவற்றையும் மறக்க வேண்டி உள்ளது. பின்னர் எதற்கு பிறரின் மனதில் இருப்பதை அறிய வேண்டும்? .நீங்கள் இங்கு வருவதே படிப்பதற்காக தான். பக்தி மார்க்கமோ வேறானது. இதுவும் கீழே விழுவதற்கான ஓர் உபாயம் வேண்டும் அல்லவா? இந்த (பக்தி) விஷயங்களால் தான் நீங்கள் விழுகிறீர்கள். இப்படி நாடகத்தின் விளையாட்டு அமைக்கப்பட்டுள்ளது. பக்தி மார்க்கத்தின் சாஸ்திரம் அதிகம் படித்து நீங்கள்

கீழே இறங்கியபடியே தமோபிரதானமாக ஆகிறீர்கள். இப்பொழுது நீங்கள் இந்த அசுத்த (சீசீ) உலகத்தில் அரவே இருக்க வேண்டியது இல்லை. கலியுகத்திற்குப் பின் சத்யுகம் வர வேண்டி உள்ளது. இப்பொழுது இருப்பது இந்த சங்கமயுகம் ஆகும். இந்த எல்லா விஷயங்களையும் தாரணை செய்ய வேண்டும். தந்தை தான் இதை புரிய வைக்கிறார். ஆனால் முழு உலகத்தின் புத்திக்கு "காட்ரெஜ்" பூட்டு போடப் பட்டுள்ளது. இவர்கள் (தேவர்கள்) தெய்வீக குணங்கள் உடையவர்களாக இருந்தார்கள். அவர்களோ அசுர குணங்கள் உடையவர்களாக ஆகிவிட்டார்கள் என்பதை நீங்கள் புரிந்துள்ளீர்கள். இப்பொழுது பக்தி மார்க்கத்தின் விஷயங்கள் அனைத்தையும் மறந்து விடுங்கள் என்று தந்தை புரிய வைக்கிறார். இப்பொழுது நான் என்ன கூறுகிறேனோ அதை மட்டுமே கேளுங்கள். "ஹியர் நோ ஈவில்" தீயதைக் கேட்காதீர்கள். இப்பொழுது நான் கூறுவதை மட்டும் கேளுங்கள். இப்பொழுது நான் உங்களை கரையேற்ற வந்துள்ளேன்.

நீங்கள் ஈசுவரிய சம்பிரதாயத்தினர் ஆவீர்கள். பிரஜாபிதா பிரம்மாவின் கமலத் திருவாய் மூலமாக நீங்கள் பிறந்துள்ளீர்கள் அல்லவா? இத்தனை பேர் அனைவரும் தத்து எடுக்கப்பட்ட குழந்தைகள் ஆவீர்கள். அவருக்கு ஆதி தேவன் என்று கூறப்படுகிறது. மகாவீரன் என்றும் கூறுகிறார்கள். குழந்தை களாகிய நீங்கள் மகாவீர் ஆவீர்கள் அல்லவா - யோக பலத்தினால் மாயை மீது வெற்றி அடைகிறீர்கள். தந்தை ஞானக் கடல் என்று கூறப்படுகிறார். ஞானக் கடலான தந்தை உங்களுக்கு அழியாத ஞான ரத்தினங்களால் (தட்டுக் களை) புத்தியை நிரப்புகிறார். உங்களை நிறைந்தவர்களாக ஆக்குகிறார். யார் ஞானத்தை தாரணை செய்கிறார்களோ அவர்கள் உயர்ந்த பதவியை அடை கிறார்கள். யார் தாரணை செய்வதில்லையோ நிச்சயம் குறைவான பதவியை தான் அடைவார்கள். தந்தையிடமிருந்து நீங்கள் ஏராளமான செல்வம் பெறுகிறீர்கள். அலாவுதீனுடைய கதை உள்ளது அல்லவா? அங்கு நமக்கு கிடைக்காது என்று (அப்ராப்தி) பொருள் எதுவுமே இருக்காது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். 21 பிறவிகளுக்கான ஆஸ்தியை தந்தை அளித்துவிடுகிறார். எல்லை யற்ற தந்தை எல்லையற்ற ஆஸ்தியை அளிக்கிறார். எல்லைக்குட்பட்ட ஆஸ்தி கிடைத்திருக்கும்பொழுது கூட "ஹே பரமாத்மா கருணை காட்டுங்கள், கிருபை புரியுங்கள்" என்று எல்லையற்ற தந்தையை அவசியம் நினைவு செய்கிறார்கள். அவர் எதை அளிக்க கூடியவர் என்பது யாருக்காவது தெரியுமா என்ன? பாபாவோ நம்மை உலகிற்கு அதிபதி ஆக்குகிறார் என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்துள்ளீர்கள். பிரம்மா மூலமாக ஸ்தாபனை என்பது படங்களில் கூட உள்ளது. பிரம்மா இங்கு முன்னால் சாதாரணமாக அமர்ந்துள்ளார். (பரமாத்மா) ஸ்தாபனை செய்கிறார் என்றால் அவசியம் அவர் (பிரம்மா) மூலமாகத் தான் செய்வார் அல்லவா? தந்தை எவ்வளவு நல்ல முறையில் புரிய வைக்கிறார். நீங்கள் முழுமையாக புரிய வைக்க முடியாதவர்களாக உள்ளீர்கள். பக்தி மார்க்கத்தில் சங்கரனுக்கு முன்னால் சென்று எங்கள் (மடியை) "பையை நிரப்புங்கள்" என்று கூறுகிறார்கள். நாங்கள் ஏழையாக உள்ளோம். எங்களது (பையை) புத்தியை நிரப்புங்கள், எங்களை இது போல ஆக்குங்கள் என்று ஆத்மா கூறுகிறது. இப்பொழுது நீங்கள் பையை நிரப்புவதற்காக வந்துள்ளீர்கள். நாங்களோ நரனிலிருந்து நாராயணராக ஆக விரும்புகிறோம் என்று கூறுகிறார்கள். இந்த படிப்பே மனிதரிலிருந்து நாராயணர் ஆவதற்கானதாகும். பழைய உலகத்தில் வருவதற்கு யாருடைய மனம் விரும்பும்? ஆனால் புதிய

உலகத்திலோ எல்லோரும் வரமாட்டார்கள். ஒரு சிலர் 25 சதவிகிதம் பழையதான உலகத்தில் வருவார்கள். கொஞ்சம் குறைவு தானே அது! சிறிதளவு கூட யாருக்காவது செய்தி அளித்து கொண்டே இருந்தீர்கள் என்றால் நீங்கள் நிச்சயம் சொர்க்கத்திற்கு அதிபதியாக ஆகி விடுவீர்கள். இப்பொழுது நரகத்திற்கு அதிபதியாகக் கூட எல்லோரும் உள்ளார்கள் அல்லவா? ராஜா ராணி பிரஜைகள் எல்லோருமே நரகத்திற்கு எஜமானராக இருக்கிறார்கள். அங்கு இரட்டை கிரீடம் அணிந்தவராக இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் இங்கு இல்லை. தற்காலத்திலோ மதங்களை யாரும் ஏற்று கொள்வதில்லை. தேவி தேவதா தர்மமே முடிந்து போய் விட்டுள்ளது. மதங்கள் சக்தி வாய்ந்தது (ரிலிஜன் இஸ் மைட்) என்று என்னவோ புகழப்படுகிறது. ஆனால் தர்மத்தை ஏற்று கொள்ளாத காரணத்தால் இன்று அந்த வலிமையே இல்லை. இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! நீங்கள் தான் பூஜிக்கத் தக்க நிலையிலிருந்து பூசாரி ஆகிறீர்கள் என்று தந்தை புரிய வைக்கிறார். 84 பிறவிகள் எடுக்கிறீர்கள் அல்லவா? நாமே தான் பிராமணர்கள், நாமே தான் தேவர்கள் பின் நாமே தான் க்ஷத்திரியர்கள்... புத்தியில் இந்த முழு சக்கரமும் வருகிறது அல்லவா? இந்த 84 பிறவிச் சக்கரத்தை நாம் சுற்றிக் கொண்டே இருக்கிறோம். இப்பொழுது மீண்டும் திரும்ப வீட்டிற்குச் செல்ல வேண்டும். பதீதமானவர்கள் (தூய்மையற்றவர்கள்) யாரும் அங்கு செல்ல முடியாது. ஆத்மா தான் பதீதமாக (தூய்மையற்றதாக) அல்லது பாவனமானதாக (தூய்மையானதாக) ஆகிறது. தங்கத் தில் தான் கலப்படம் ஆகிறது அல்லவா? நகையில் கலப்படம் செய்வ தில்லை. இது ஞான அக்கினி யாகும். இதன் மூலம் முழு அழுக்கு நீங்கி நீங்கள் தூய தங்கமாக ஆகிவிடுவீர்கள். பிறகு நகை (உடல்) கூட உங்களுக்கு நல்லதாக கிடைக்கும். இப்பொழுது ஆத்மா பதீதமாக (தூய்மையற்றதாக) இருக்கிறது. எனவே பாவனமாக இருப்பவர்களுக்கு முன்னாள் சென்று வணங்குகிறார்கள். செய்வது எல்லாமே ஆத்மாவாகும் அல்லவா? "குழந்தைகளே, என் ஒருவனை மட்டும் நினைவு செய்யுங்கள். அப்பொழுது (வாழ்க்கை) படகு கரையேறிவிடும்" என்று இப்பொழுது தந்தை புரிய வைக்கிறார். தூய்மையாக ஆகி தூய்மையான உலகிற்குச் சென்றுவிடுகிறீர்கள். இப்பொழுது யார் எந்த அளவிற்கு முயற்சி செய்வார்களோ.. அனைவருக்கும் இதே அறிமுகம் அளித்துக் கொண்டே இருங்கள். அவர் எல்லைக்குட்பட்ட தந்தை. இவர் எல்லையற்ற தந்தை ஆவார். சங்கமத்தில் தான் தந்தை சொர்க்கத்தின் ஆஸ்தியை அளிக்க வருகிறார். எனவே அப்பேர்ப்பட்ட தந்தையை நினைவு செய்ய வேண்டி உள்ளது அல்லவா? ஆசிரியரை எப்பொழுதாவது மாணவர்கள் மறப்பார்களா என்ன? ஆனால் இங்கு மாயை மறக்க வைத்துக் கொண்டே இருக்கும். மிகவும் எச்சரிக்கை யுடன் இருக்க வேண்டும். இது போர்க்களம் அல்லவா? இப்பொழுது விகாரத்தில் செல்லாதீர்கள், அசுத்தமானவர் ஆகாதீர்கள் என்று தந்தை கூறுகிறார். இப்பொழுதோ சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டும். தூய்மையாக ஆகித் தான் தூய்மையான புது உலகின் அதிபதி ஆகிவிடுவீர்கள். உங்களுக்கு உலகத்தின் அரசாட்சி அளிக்கிறேன். அது சாதாரண குறைவான விஷயமா என்ன? இந்த ஒரு பிறவியில் மட்டும் தூய்மை யாக ஆகுங்கள். இப்பொழுது தூய்மையாக ஆகவில்லை என்றால் கீழே விழுந்து விடுவீர்கள். பலவிதமான ஈர்ப்புகள் (டெம்ப்டேஷன்) நிறைய உள்ளன. காமத்தின் மீது வெற்றி அடைவதால் நீங்கள் உலகிற்கு அதிபதி ஆகிவிடுவீர்கள். பரமபிதா பரமாத்மா தான் ஜகத் குரு ஆவார் என்பதை நீங்கள் தெளிவாகக் கூற முடியும். அவர் தான் முழு உலகிற்குச்

சத்கதியை அளிக்கிறார். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. அழியாத ஞான ரத்தினங்களால் புத்தி என்ற பையை நிரப்பி செல்வம் நிறைந்தவர் ஆக வேண்டும். எந்த ஒரு விதமான அகங்காரத்தையும் கொண்டிருக்கக் கூடாது.

2. சேவைக்குத் தகுதியுடையவராக ஆகிய பிறகு ஒரு பொழுதும் துரோகியாக ஆகி (டிஸ்சர்விஸ்) எதிரான சேவை செய்யக் கூடாது. தானம் கொடுத்த பிறகு அதிக கவனமாக இருக்க வேண்டும். ஒருபொழுதும் அதை திரும்பப் பெறுவதற்கான எண்ணம் வரக் கூடாது.

வரதானம்: பரமாத்ம ஒளியின் நேரடித் தொடர்பின் மூலம் இருளை விரட்டக் கூடிய கலங்கரை விளக்கு (லைட் ஹவுஸ்) ஆகுக.

குழந்தைகளாகிய உங்களிடம் பரமாத்மா லைட் உடன் நேரடித் தொடர்பு இருக்கிறது. சுவமானத்தின் நினைவு என்ற சுவிட்ச் ஆன் செய்தாலும் போதும் லைட் வந்து விடும். மேலும் சூரியனின் ஒளியை மறைக்கும் அளவிற்கு எவ்வளவு பெரிய கருப்பு மேகங்கள் வந்தாலும் அவை நீங்கி விடும். இதன் மூலம் நீங்கள் சுயம் லைட்டாக இருப்பீர்கள், மற்றவர்களுக்கும் லைட் ஹவுஸ் ஆகிவிடுவீர்கள்.

சுலோகன்: சுய முயற்சியில் தீவிரமாகும் பொழுது உங்களது அதிர்வலைகள் மூலம் மற்றவர்களது மாயை எளிதாக ஓடிவிடும்.